

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாட்டின் கலாச்சார உறவுகளை மேம்படுத்தும் 'வேர்களைத் தேடி' திட்டத்தின் கீழ், 14 நாடுகளைச் சேர்ந்த 99 அயலகத் தமிழ் இளைஞர்களுக்கு, நேற்று முன்தினம் (1.8.2025) முதல் 15.8.2025 வரையிலான தமிழக பண்பாட்டுப் பயணத்திற்கான பயண குறிப்புகள், புத்தகங்கள், அடையாள அட்டை மற்றும் உடைகள் போன்ற பொருட்களை வழங்கி, அவர்களுடன் குழு புகைப்படம் எடுத்துக் கொண்டார். இந்நிகழ்வில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின், சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு நாசர், தலைமைச் செயலாளர் நா. முருகானந்தம், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை செயலாளர் திருமதி ரீட்டா ஹரிஷ் தக்கர், அயலகத் தமிழர் நலன் மற்றும் மறுவாழ்வுத்துறை ஆணையர் முனைவர் மா.வள்ளலார், பொது மற்றும் மறுவாழ்வுத்துறை சிறப்புச் செயலாளர் சஜ்ஜன் சிங் ரா சவான் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களை நேற்று முன்தினம் (1.8.2025) தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு தலைவர் ஏ.எம். விக்ரமராஜா சந்தித்து, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பு சார்பாக உரிமம் பெறுவதற்கான நடைமுறைகளை எளிமைப்படுத்துவது குறித்து அளிக்கப்பட்ட கோரிக்கை மனுவின் விவரங்கள் குறித்து ஆய்வு மேற்கொள்வதற்காக துறை அலுவலர்கள் மற்றும் வணிகர் சங்க அமைப்புகளின் பிரதிநிதிகளைக் கொண்ட ஆலோசனைக் குழு அமைக்கப்படும் என்று அறிவித்தமைக்காக, நன்றி தெரிவித்துக்கொண்டனர். இந்நிகழ்வின்போது, தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் பொருளாளர் ஏ.எம். சதக்கத்துல்லா மற்றும் நிருவாகிகள் உடனிருந்தனர்.

### அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்படும் இந்தியர்களின் நிலை என்ன?

# இந்திய மாணவர்களுக்கு அமெரிக்க 'விசா' கிடைப்பதில் சிக்கல் ஏன்?

## மக்களவையில் - நாடாளுமன்றக் கழகக் குழுத் தலைவர் கனிமொழி கருணாநிதி கேள்வி!

புதுடெல்லி, ஆக.3-

**அமெரிக்காவில் இருந்து இந்தியாவுக்கு நாடுகடத்தப்பட்டவர்கள் பற்றியும், இந்திய மாணவர்களுக்கு அமெரிக்கா செல்வதில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் தொடர்பாகவும் திமுக துணைப் பொதுச் செயலாளரும், திமுக நாடாளுமன்றக் குழுத் தலைவருமான கனிமொழி கருணாநிதி கேள்விகளை எழுப்பினார்.**



"ஜனவரி 2025 முதல் அமெரிக்காவிலிருந்து நாடு கடத்தப்பட்ட இந்திய குடிமக்கள் குறித்த தரவுகளை அரசாங்கம் வைத்திருக்கிறதா? அப்படியென்றால் அவர்கள் நாடு கடத்தப்பட்ட முறைகள் என்ன?;

அமெரிக்கா மற்றும் பிற நாடுகளிலிருந்து நாடுகடத்தப்படும் இந்திய நாட்டினரை திருப்பி அனுப்பும்போது பயணம் தொடர் பான சிறந்த ஒருங்கிணைப்பு மற்றும் மனிதாபிமானத்துடன் நடத்துவதை உறுதி செய்ய அரசாங்கம் ராஜதந்திர நடவடிக்கைகளை எடுத்துள்ளதா?

மாணவர் விசா செயல்முறைகளில் சமீபத்திய மாற்றங்கள் மற்றும் தாமதங்கள், குறிப்பாக மாணவர் மற்றும் பரிமாற்ற பார்வையாளர் விசாக்களுக்கான புதிய நியமனங்கள் (F, M, J

பிரிவுகள்) இடைநிறுத்தப்பட்டதாக அறிவிக்கப்பட்டவை குறித்து அமெரிக்க அரசிடம் இருந்து நமது இந்திய அரசுக்கு முறைப்படி தகவல் தெரிவிக்கப்பட்டதா?

அமெரிக்காவில் நாடுகடத்தல், விசா மறுப்பு மற்றும் சமூக ஊடக கணக்கு சரிபார்ப்பு நடைமுறைகளை எதிர்கொள்ளும் இந்திய மாணவர்கள் மற்றும் புலம் பெயர்ந்தோரின் நிலையை கண்காணிக்க அரசாங்கத்திடம் ஏதேனும் பொறிமுறைகள் உள்ளதா?

நாடு கடத்தப்பட்ட இந்திய மாணவர்களுக்கு மறுவாழ்வு அளித்திட அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் என்ன?" ஆகிய கேள்விகளை கனிமொழி கருணாநிதி எம்பி. கேட்டிருந்தார்.

இக்கேள்விகளுக்கு வெளியுறவுத் துறை இணையமைச்சர் கிர்த்தி வரதன் சிங் அளித்த பதில் வருமாறு:-

"2025 ஜனவரி 20 ஆம் தேதி முதல் ஜுலை 22 ஆம் தேதி வரையிலான காலகட்டத்தில் 1703 இந்திய குடிமக்கள் அமெரிக்க அரசால் இந்தியாவுக்கு நாடு கடத்தப்பட்டுள்ளனர். இவர்களில் 1562 பேர் ஆண்கள், 141 பேர் பெண்கள் ஆவர்.

இவர்களில் அமெரிக்க சுங்கத்துறை, எல்லைப் பாதுகாப்புத் துறை விமானங்கள் மூலமாக பிப்ரவரி 5, 15, 16 தேதிகளில் 333 இந்திய குடிமக்கள் அனுப்பப்பட்டனர்.

அமெரிக்க குடிவரவு மற்றும் சுங்க அமலாக்கத் துறையால் தனி விமானங்கள் மூலமாக மார்ச் 19, ஜுன் 8, ஜுன் 25 ஆகிய தேதிகளில் 231 பேர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

அமெரிக்காவின் உள்நாட்டு பாதுகாப்புத் துறை ஏற்பாட்டில் தனி விமானங்கள் மூலமாக ஜுலை 5, ஜுலை 18 தேதிகளில் 300 இந்தியர்கள் நாடு கடத்தப்பட்டனர்.'

மேலும் பனாமாவில் இருந்து வர்த்தக விமானங்கள் மூலமாக தனி நபர்களாகவோ சிறு குழுக்களாகவோ 72 பேர் விமான டிக்கெட் ஏற்பாடு செய்யப்பட்டு இந்தியா திரும்பினர்.

இதேபோல அமெரிக்காவில் இருந்து வர்த்தக விமானங்கள் மூலமாக 767 பேர் இந்தியாவுக்கு அனுப்பப்பட்டனர்.

இவர்கள் அதிகபட்சமாக பஞ்சாப்பைச் சேர்ந்தவர்கள் 620 பேரும், ஹரியானவைச் சேர்ந்தவர்கள் 604 பேரும் ஆவர்.

அமெரிக்காவில் இருந்து நாடுகடத்தப்பட்ட இந்தியர்களில் தமிழ்நாட்டைச் சேர்ந்தவர்கள் 17 பேர்.

நாடு கடத்தல் நடவடிக்கைகளின் போது இந்திய குடிமக்களை மனிதாபிமானத்துடன் நடத்துவதை உறுதி செய்வதற்காக வெளியுறவு அமைச்சகம் அமெரிக்கத் தரப்போடு தொடர்ந்து தொடர்பில் இருந்து வருகிறது.

நாடு கடத்தப்படுபவர்களை நடத்தும் முறை குறித்து குறிப்பாக கைவிலங்குகளைப் பயன்படுத்துவது குறித்து, பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு முறையாக நடத்துவது குறித்து அமெரிக்க அதிகாரிகளிடம் வெளியுறவு அமைச்சகம் தனது கவலைகளை வலுவாகப் பதிவு செய்தது.

நாடு கடத்தல் செயல்பாடுகளின் போது... டர்பன் உள்ளிட்ட தலைப்பாகைகள் பயன்படுத்துதல் மற்றும் விருப்ப உணவு உள்ளிட்ட மத, கலாச்சாரம் தொடர்பான நம்பிக்கைகளுக்கு அனுமதி தருவது தொடர்பாகவும் அமெரிக்கத் தரப்பிடம் முறையாக வெளியுறவு அமைச்சகத்தால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிப்ரவரி 5, 2025 க்குப் பிறகு நாடு கடத்தப்படுபவர்களை தவறாக நடத்தியது தொடர்பான எந்த புகாரும் இந்த அமைச்சகத்திற்கு கிடைக்கவில்லை.

மாணவர் விசா நியமனங்களைப் பொறுத்தவரை... இவ்விசாக்களை பெறுவதில் உள்ள சிரமங்களைக் குறைத்திடுமாறு, நமது நாட்டு மாணவர்கள் மற்றும் அவர்களது குடும்பத்தினரிடமிருந்து வெளியுறவு அமைச்சகம் பல மனுக்களை பெற்றிருக்கிறது.

இந்த விஷயத்தை அமைச்சகம் புதுடெல்லி யில் உள்ள அமெரிக்க தூதரக அதிகாரிகளுக்கும் மற்றும் அமெரிக்க வெளியுறவுத் துறைக்கும் எடுத்துச் சென்றது.

அப்போது அமெரிக்க தரப்பில் சில விளக்கங்கள் தெரிவிக்கப்பட்டன.

மாணவர் விசாக்களுக்கான கூடுதல் பாதுகாப்புத் தேவைகள் காரணமாக இந்தியாவில் உள்ள அமெரிக்கத் தூதரகங்கள் விசா செயல்படுத்தும் திறனை குறைத்திருந்தன. இருப்பினும், மாணவர் விசா நியமனங்கள் இப்போது திறக்கப்பட்டுள்ளன.

J1 மருத்துவர் பிரிவைப் பொறுத்தவரை, அமெரிக்கத் தரப்பு அவர்களின் நியமனங்களுக்கு முன்னுரிமை அளிக்க மென்பொருள் அடிப்படையிலான தீர்வைத் தொடங்கியுள்ளது.

இந்த விசா வகையின் கீழ் வாய்ப்பு கிடைக்க வில்லை என முன்னர் தெரிவித்த பல மாணவர்கள், இப்போது பெற்றுள்ளனர்.

புதிய கல்வியாண்டு தொடங்குவதற்கு முன்பு மாணவர் விசா அவசரத் தேவையை அங்கீகரிக்கும் வகையில், ஆகஸ்ட் மாத இறுதிக்குள் குறிப்பிட்ட எண்ணிக்கையிலான மாணவர் விசா வழங்கல்களை விரைவுபடுத்த அமெரிக்கத் தூதரகம் செயல்பட்டு வருகிறது.

மாணவர் விசா பிரச்சினையை சுற்றியுள்ள நிச்சயமற்ற தன்மையைக் குறைக்க உதவும் வகையில்... அடிக்கடி கேட்கப்படும் கேள்விகள் (FAQகள்) கொண்ட மாணவர் விசா ஃபேக்ட் ஷீட்டை அமெரிக்கத் தூதரகம் உருவாக்கி வருகிறது என அமெரிக்க தரப்பில் நமது அரசிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விசா வழங்குவது என்பது சம்பந்தப்பட்ட நாட்டின் இறையாண்மை உரிமையாக இருந்தாலும், அமெரிக்க விசாக்களைப் பெறுவதில் இந்திய மாணவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்து வெளியுறவு அமைச்சகம் புதுடெல்லியில் உள்ள அமெரிக்க தூதரகம் மற்றும் வாஷிங்டனில் உள்ள உள்ள அமெரிக்க அரசின் வெளிவிவகாரத் துறையுடனும் தொடர்ந்து எடுத்துரைத்து வருகிறது.

இந்தியாவில் இருந்து அமெரிக்காவுக்கு செல்லும் மாணவர்கள், பணிக்காக செல்பவர்கள் உள்ளிட்ட சட்டப்பூர்வ பயணங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், குறுகிய கால சுற்றுலா மற்றும் வணிகப் பயணங்களை எளிதாக்குவதற்கும் பரஸ்பர நன்மை பயக்கும் மற்றும் பாதுகாப்பான கட்டமைப்புகளை ஊக்குவிப்பதற்காக இந்திய அரசு அமெரிக்க அரசாங்கத்துடன் தொடர்ந்து பேசி வருகிறது.

அமெரிக்க பல்கலைக்கழகங்களில் சேர்ந்துள்ள இந்திய மாணவர்களுடன் அமெரிக்காவில் உள்ள இந்திய தூதரகங்கள் வழக்கமான தொடர்புகளைப் பேணுகின்றன.

வெளிநாடுகளில் இருக்கும் நமது மாணவர்களின் நலன் தொடர்பான விவகாரங்களை நமது தூதரகங்களில் உள்ள அர்ப்பணிப்புள்ள அதிகாரிகள் அக்கறையாக கண்காணித்து கவனித்து வருகிறார்கள்.

உயர்கல்விக்காக வெளிநாடுகளுக்குச் செல்லும் இந்திய மாணவர்கள் MADAD போர்ட்டலில் பதிவு செய்யுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மாணவர்கள் உட்பட வெளிநாடுகளில் குடியேறியுள்ள இந்தியர்களின் குறைகளை தீர்த்து வைப்பதில் நமது தூதரகங்கள் முன்னுரிமை கொடுக்கின்றன. வெளிநாடுகளில் உள்ள நமது குடிமக்களு டன் தொலைபேசி அழைப்புகள், நேரடியாக சந்தித்தல், மின்னஞ்சல்கள், சமூக ஊடகங்கள், 24x7 அவசர உதவித் தொலைபேசி எண்கள் மற்றும் MADAD போர்டல் மூலம் அவர்களின் பிரச்சினைகளை உடனுக்குடன் கவனித்து பதிலளிக்கப்படுகின்றன.

அவசர மருத்துவ பராமரிப்பு மற்றும் தங்குமிடம் உள்ளிட்ட அனைத்து சாத்தியமான தூதரக உதவிகளும் பிரச்சினையில் இருக்கும் இந்தியர்களுக்கு தேவைப்படும் போதெல்லாம் உடனடியாக வழங்கப்படுகின்றன.

மாணவர்கள் உட்பட வெளிநாட்டு இந்தியர்களுக்கு சிக்கலான சூழ்நிலைகளில் உதவுவதற்காக, வெளிநாடுகளில் உள்ள இந்திய தூதரகங்களில் இந்திய சமூக நல நிதியம் (ICWF) அமைக்கப்பட்டுள்ளது" என கனிமொழி கருணாநிதி எம்பி.க்கு அளித்த பதிலில் வெளியுறவுத் துறை இணையமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.




தமிழ்நாடு முதலமைச்சர் தளபதி மு.க.ஸ்டாலின் அவர்கள் மருத்துவம் மற்றும் மக்கள் நலவாழ்வு துறையின் சார்பில் 'நலம் காக்கும் ஸ்டாலின்' திட்டத்தை தொடங்கி வைத்ததை தொடர்ந்து நீர்வளம், சட்டத்துறை அமைச்சர் துரைமுருகன் அவர்கள் வள்ளிமலை அரசினர் மேல்நிலைப் பள்ளியில் முகாமை தொடங்கி வைத்தார். உடன் மாவட்ட கழக செயலாளர் ஏ.பி.நந்தகுமார் எம்.எல்.ஏ., மாவட்ட ஆட்சியர் வே.இரா.சுப்புலட்சுமி குடியாத்தம் சட்ட மன்ற உறுப்பினர் அமலுவிஜயன், ஊராட்சிஒன்றியகுழு தலைவர் வேல்முருகன், துணை தலைவர் சரவணன், மாநகராட்சி துணை மேயர் எம்.சுனில்குமார், ஒன்றிய குழு உறுப்பினர் சுஜாதா கருணாகரன், ஒன்றிய கழக செயலாளர் பொன்னை சி.ரவி, வள்ளிமலை ஊராட்சி மன்ற தலைவர் வாசுகி கோட்டீஸ்வரன் மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

### அமெரிக்கா - பாஸ்டன் நகரில்

# சர்வதேச சட்டமன்ற உறுப்பினர்கள் உச்சி மாநாடு!

## இ.பரந்தாமன் எம்.எல்.ஏ. பங்கேற்கிறார்!

சென்னை, ஆக.3–

அமெரிக்காவின் மாசசூசெட்ஸ் மாநிலத் தலைநகர் பாஸ்டன் நகரிலுள்ள "பாஸ்டன் மாநாடு மற்றும் கண்காட்சி அரங்கில்" (Boston Convention and Exhibition Centre) ஆகஸ்டு 4ஆம் தேதி தொடங்கி ஆகஸ்டு 6ஆம் தேதி முடிய நடைபெறவுள்ள சர்வதேச சட்டமன்ற உறுப்பினர்கள் உச்சி மாநாட்டில் (Global Legislative Summit) தி.மு.கழகச் சட்டத்துறை இணைச் செயலாளரும் எழும்பூர் சட்டமன்ற உறுப்பினருமான வழக்கறிஞர் இ.பரந்தாமன், இம்மாநாட்டு ஏற்பாட்டாளர்களின் அழைப்பின் பேரில் கலந்துகொள்கிறார்.



அமெரிக்காவைச் சேர்ந்த "மாநிலச் சட்டப்பேரவைகளின் தேசிய மாநாடு" (National Conference of State Legislatures – NCSL) என்ற அமைப்பு நடத்தும் இச்சர்வதேச மாநாட்டில் இந்திய ஒன்றியத்தைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கு கொள்ளும் ஏற்பாடுகளை இந்தியாவைச் சேர்ந்த "தேசிய சட்டமன்ற உறுப்பினர்களின் மாநாடுபாரத்" (National Legislators' Conference Bharat) எனும் அமைப்பு ஒழுங்கு செய்திருக்கிறது. இந்திய ஒன்றியத்தைச் சேர்ந்த 24 மாநிலங்களிலிருந்து 21 அரசியல் கட்சிகளைச் சேர்ந்த சட்டமன்ற மற்றும் மேலவை உறுப்பினர்கள் இந்த உச்சி மாநாட்டில் கலந்துகொள்கின்றனர். தமிழ்நாட்டில் இருந்து திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த எழும்பூர் சட்டமன்றத் தொகுதி உறுப்பினர் வழக்கறிஞர் இ.பரந்தாமன் இம்மாநாட்டில் பங்கேற்கிறார்.

இந்த உச்சி மாநாட்டின் நிகழ்வுகள் மற்றும் நோக்கம் குறித்துக் கூறிய சட்டமன்ற உறுப்பினர் இ.பரந்தாமன், "எனது மாநிலத்தை யும் தொகுதியையும் இச்சர்வதேச மாநாட்டில் பிரதிநிதித்துவப் படுத்துவதில் நான் பெருமிதம் கொள்கிறேன். ஆட்சியில் செயற்கை நுண்ணறி வின் பாத்திரம் (Artificial Intelligence in Governance), எண்ம ஜனநாயகம் (Digital Democracy), இணைய பாதுகாப்பு (Cyber Security), வாக்காளர்களின் நம்பிக்கை, புதுமையான கொள்கை வடிவமைப்பு (Policy Innovation) உள்ளிட்ட தலைப்புகளில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த சட்ட வல்லுநர்களுடன் சட்டமன்ற உறுப்பினர்கள் கலந்துரையாடுவார்கள். மேலும், அமெரிக்காவில் கல்வித்துறை, வணிகம் மற்றும் பொதுச் சேவைகளில் ஈடுபட்டு வரும் இந்திய வம்சாவளியினருடன் கலந்துரையாடுவதோடு, அமெரிக்கா வில் சட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படும் விதம் குறித்தும் சட்டன்ற உறுப்பினர்கள் அறிந்து கொள்வார்கள்.

பல்வேறு நாடுகளின் அரசாங்கங்கள் பின்பற்றி வரும் சிறந்த நடைமுறைகள் குறித்து இம்மாநாட்டின் வழியாகச் சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிந்து கொள்ளுவது மட்டுமின்றி, நமது நாட்டு மக்களுக்குச் சிறந்த முறையில் பணியாற்றுவதற்கு அந்த நடைமுறைகளைப் பயன்படுத்துவதற்கு முனையும் வாய்ப்பையும் இம்மாநாடு அவர்களுக்கு வழங்கும். நாடுகள், தேசங்களுக்கு இடையேயான ஒத்துழைப்பு, பேச்சுவார்த்தை, அறிவுப் பகிர்தல் ஆகியவற்றின் வழியாக ஜனநாயகத்தை வலுப்படுத்துவதில் இந்தியாவிற்கு உள்ள அக்கறையை வெளிப்படுத்தும்விதமாக இந்த உச்சி மாநாட்டில் நமது நாட்டின் சட்டமன்ற உறுப்பினர்கள் பங்கேற்கிறார்கள். இத்தகைய சிறப்புமிக்க சர்வதேச உச்சி மாநாட்டில் கலந்து கொள்ள அனுமதியும் ஊக்குவிப்பும் அளித்த தமிழ்நாட்டின் முதலமைச்சர் அவர்களுக்கும், துணை முதலமைச்சர் அவர்களுக்கும் எனது நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்"

### தமிழ்நாட்டில் 3 ஆண்டுகளில் நிறுவப்பட்ட மொத்த

# ஐ.டி.மென்பொருள் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை என்ன?

## மக்களவையில் தருமபுரி ஆ.மணி கேள்வி!



புதுடெல்லி, ஆக. 3–

மக்களவையில் தருமபுரி நாடாளுமன்றத் தொகுதி உறுப்பினர் வழக்கறிஞர் ஆ.மணி தமிழ்நாட்டில் 3 ஆண்டுகளில் நிறுவப்பட்ட மொத்த ஐ.டி. மென்பொருள் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை என்ன என்று கேள்வி எழுப்பினார்.

இது குறித்து அவரது கேள்வி வருமாறு:–

கடந்த மூன்று ஆண்டுகளில் நாட்டில் நிறுவப்பட்ட மொத்த ஐடி மென்பொருள் உற்பத்தி அலகுகளின் எண்ணிக்கை மற்றும் அதே காலகட்டத்தில் தமிழ்நாடு மாநிலத்தில் அமைக்கப்பட்ட அலகுகளின் எண்ணிக்கை என்ன? தர்மபுரி மக்களவைத் தொகுதியிலோ அல்லது அதைச் சுற்றியோ அத்தகைய உற்பத்தி அலகுகள் ஏதேனும் நிறுவப்பட்டுள்ளனவா?, முன்மொழியப் பட்டுள்ளனவா? அல்லது அங்கீகரிக்கப்பட்டுள்ளனவா? அப்படி இருப்பின்,அதன் இடம், முதலீட்டு அளவு, உருவாக்கப்பட்ட வேலைவாய்ப்பு மற்றும் எதிர்பார்க்கப்படும் உற்பத்தி திறன் உள்ளிட்ட விவரங்கள் என்ன? தர்மபுரி மாவட்டத்தில் மின்னணு வியல்/ஐடி மென்பொருள் அலகுகளை நிறுவுவதற்கான சாத்தியக்கூறு ஆய்வுகள் அல்லது தள மதிப்பீடுகளை இதுவரை அரசாங்கம் மேற்கொண்டுள்ளதா அல்லது மேற்கொள்ள முன்மொழிந்துள்ளதா? தமிழ்நாட்டில் தர்மபுரி போன்ற அடுக்கு2 மற்றும் அடுக்கு3 மாவட்டங்களில் மின்னணுவியல் உற்பத்தித் தொகுப்புகளின் சமச்சீர் பிராந்திய விநியோகத்தை ஊக்குவிக்க ஒன்றிய அரசு எடுத்து வரும் நடவடிக்கைகளின் விவரங்கள் என்ன ?

இவ்வாறு தருமபுரி ஆ.மணி மின்னணுவியல் மற்றும் தகவல் தொழில்நுட்ப அமைச்சர் ஜிதன் பிரசாதிடம் கேள்வி எழுப்பினார்.